www.Padasalai.Net

தமிழ்நாடு தொடக்கக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–6.
ந.க.எண். 25375/டி3/2024, நாள். 09.11.2024.

பொருள்: தொடக்கக்கல்வி பணிகள்– தருமபுரி மாவட்டம்– அரூர் கல்வி மாவட்டம்– காரிமங்கலம் ஒன்றியம்– இராமியாம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் பட்டதாரி ஆசிரியராக பணிபுரிந்த திரு K.பாலாஜி என்பவர் மீது பள்ளி மேலாண்மை குழு மற்றும் ஊர் பொதுமக்களிடமிருந்து புகார் மனு பெறப்பட்டது – நடவடிக்கை மேற்கொண்டது – இவ்வாறான புகார்கள் மாவட்டங்களில் பெறும் பட்சத்தில் – விசாரணையின் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்துதல் – சார்பு

பார்வை: 1. 07.11.2024 நாளிட்ட செய்தி தாளில் வரப்பெற்ற செய்திகுறிப்பு
2. தருமபுரி மாவட்ட முதன்மை கல்வி அலுவலரின் கடிதம் ந. க. எண் 1296/B4/2024 நாள் 23.08.2024 மற்றும் 5547/A4/2024 நாள் 25.09.2024
3. அரூர் மாவட்ட கல்வி அலுவலரின் கடிதம் ந.க.எண் 2982/ஆ2/2024 நாள் 05.11.2024 மற்றும் 07.11.2024

-----

மேற்காணும் பொருள் சார்ந்து அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

அதில் தருமபுரி மாவட்டம், அரூர் கல்வி மாவட்டம், காரிமங்கலம் ஒன்றியம், இராமியம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் பட்டதாரி (ஆங்கிலம்) ஆசிரியராகப் பணிபுரிந்து வந்த திரு K. பாலாஜி என்பவர் பள்ளிப் பணிக்கு சரியாக வருகை புரியாமல் வேறொரு நபரைக் கொண்டு பாடம் நடத்தியது என இராமியம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த ஊர் பொதுமக்கள் மற்றும் கல்வி மேலாண்மை குழு ஆகியோரிடம் இருந்து புகார் மனு தருமபுரி மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்பட்டு அம்மனுவின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு தருமபுரி முதன்மைக் கல்வி அலுவலருக்கு பரிந்துரை செய்ததின் அடிப்படையில் பார்வை 2–ல் காணும் கடிதத்தின் அடிப்படையில் அரூர் மாவட்ட கல்வி அலுவலரால் (தொடக்கக்கல்வி) 27.09.2024 அன்று பள்ளியில் நேரடி ஆய்வு செய்து பள்ளி தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள் மற்றும் ஊர் பொதுமக்களிடம் இப்புகார் குறித்து விசாரணை நடத்தினர்.

www.Padasalai.Net

மேலும், இப்புகாரில் பள்ளியில் மாணவர் சேர்க்கை குறைந்து விட்டதாகவும், அதனால் அவ்வூரிலுள்ள மாணவர்கள் வேறு பள்ளிக்கு சென்று பயிலும் நிலை உருவாகியதால் இந்நிகழ்வினை கண்டித்து மேற்படி ஆசிரியரை வேறு பள்ளிக்கு மாறுதல் செய்யுமாறு ஊர் பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டது.

மாவட்டக் கல்வி அலுவலரின் விசாரணையில் திரு K. பாலாஜி (பட்டதாரி ஆசிரியர்) என்பவர் பள்ளிப் பணிக்கு சரியாக வருவதில்லை என்றும் அவருக்கு பதிலாக இல்லம் தேடிக் கல்வியில் பணிபுரிந்து வரும் திருமதி. சிந்துஜா என்பார் அப்பள்ளி மாணவர்களுக்கு ஆங்கில பாடம் நடத்தி வந்துள்ளார் என விசாரணையில் கண்டறியப்பட்டது.

ஊர் பொது மக்களால் ஆசிரியர் மீது தெரிவிக்கப்பட்ட புகாரில் குறிப்பிடப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்தும் மாவட்ட கல்வி அலுவலரின் 27.09.2024 அன்றைய நாளிட்ட விசாரணையில் உண்மை என தெரிய வந்ததன் அடிப்படையிலும் மற்றும் ஊர் பொதுமக்களிடம் பெறப்பட்ட விளக்கத்தின் அடிப்படையில் புகாருக்கு ஆளான திரு K.பாலாஜி என்பவரை தமிழ்நாடு குடிமை பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளின்படி, அரூர் மாவட்ட கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண் 2982/ஆ2/2024 நாள் 05.11.2024 ன் படி தற்காலிக பணி இடைநீக்கம் செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், அப்பள்ளியில் திரு K. பாலாஜி என்பவருக்கு பதிலாக மாற்று நபரைக் கொண்டு பாடம் நடத்திய செயலினை உயர் அலுவலர்களுக்கு தெரியப்படுத்தாமல் இச்செயலினை ஊக்குவித்த தலைமையாசிரியர் திருமதி. நாகலட்சுமி என்பவரை அதே ஒன்றியத்திற்குட்பட்ட தாசம்பைல் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக்கு நிர்வாக மாறுதல் அரூர் மாவட்ட கல்வி அலுவலரால் பார்வை 3- ன் படி, ஆணை வழங்கப்பட்டுள்ளது.

எனவே, இதுபோன்ற நிகழ்வுகளால் பள்ளியில் பயிலும் மாணவர்களின் கல்வி நலன் பாதிக்கப்படுவதை தவிர்க்கும் பொருட்டு ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தல் பணியினை மேற்கொள்ளாமல் வெளிநபரைக் கொண்டு மாணவர்களுக்கு கற்பித்தல் பணி நடத்தப்படுவது குறித்து பள்ளி ஆண்டாய்வு மற்றும் பள்ளிப் பார்வையின் போது ஏதும் கண்டறியப்பட்டாலோ அல்லது இது குறித்த புகார்கள், ஏதும் பெறப்பட்டால் கண்டிப்பாக அப்புகார் மீது தனிக்கவனம்

www.Padasalai.Net

செலுத்தி மாவட்டக் கல்வி அலுவலரே (தொடக்கக் கல்வி) விசாரணை மேற்கொண்டு, அவ்விசாரணையில் உண்மை இருப்பின் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டு இறுதியாணை பிறப்பிக்க வேண்டும். பள்ளிகளில் இது போன்ற நிகழ்வுகள் ஏற்படும் போது அத்தகவலை மாவட்டக் கல்வி அலுவலருக்கு அளிக்கத் தவறும் பட்சத்தில் தலைமை ஆசிரியர், மற்றும் வட்டாரக் கல்வி அலுவலர் ஆகியோர் மீதும் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என மாவட்டக் கல்வி அலுவலருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

தொடக்கக் கல்வி இயக்குநர்

**பெறுநர்**

அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
(தொடக்கக் கல்வி)

**நகல்**
அரசுச் செயாலளர்,

பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை-9. அவர்களுக்கு தகவலுக்காகப் பணிந்து அனுப்பப்படுகிறது.